


**31. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்பதன் மூலம் சுய சார்பு பாரதம் மற்றும் வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை எட்ட முடியும் என்று மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா - சீனா இடையே எல்லை மேலாண்மை தொடர்பான ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகியுள்ளது.

3. ஜெர்மனியில் அயலக தமிழர்கள் சார்பில் நடைபெறும் தமிழ்பண்பாட்டு நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று பங்கேற்கிறார்.

4. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 28 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

5. பீகார் ராஜ்கிரில் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

************

**மன்கீபாத்**

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்பதன் மூலம் சுய சார்பு பாரதம் மற்றும் வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை எட்ட முடியும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 125ஆவது முறையாக இன்று உரையாற்றிய பிரதமர், பண்டிகை காலங்களில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை பரிசலிக்க அனைவரும் முன்வர வேண்டும் என்றார்.

ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வு நாட்டின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுப்பதாக கூறிய பிரதமர், இத்தகைய உணர்வு விளையாட்டுதுறையிலும் பெரும் பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

மழைகாலங்களில் ஏற்படும் இயற்கை பேரிடர்களை சமாளிக்க தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்பு படையினரின் அயராத பணியை பாராட்டிய பிரதமர் அண்மையில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளின் போது கண்காணிப்பு கேமராக்கள், உயிர் கண்டறியும் கருவிகள், ட்ரோன் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில்நுட்ப உதவியுடன் இப்படையினர் சிறப்பாக சேவை ஆற்றியதாக கூறினார்.

UPSC–யின் பல்வேறு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று இறுதி பட்டியலில் இடம்பெறாத தேர்வர்கள் குறித்த தரவுகளை பிரதீபா சேது டிஜிட்டல் தளத்திலிருந்து பெற்று தனியார் நிறுவனங்கள் அவர்களுக்கு, வேலை வாய்ப்புகளை வழங்கி வருவதாக கூறிய பிரதமர் இதன் மூலம் இளைஞர்களுக்கு தற்போது புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உலகம் முழுவதும் இந்திய கலாச்சாரம் மற்றும் ராமாயணம் உள்ளிட்ட இதிகாசங்கள் குறித்த ஆர்வம் அதிகரித்து வருவது மகிழ்ச்சியளிப்பதாக கூறிய பிரதமர் ரஷ்யாவில் ராமாயணம் குறித்த கண்காட்சி நடைபெற்றதை நினைவு கூர்ந்தார்.

இத்தாலியில் மகரிஷி வால்மீகியின் சிலைகள், கனடாவில் ராமர் சிலைகள் திறக்கப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஹைதராபாத் விடுதலை தினம் அடுத்த மாதம் கொண்டாடப்பட உள்ளதை எடுத்துரைத்த பிரதமர் இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் ஹைதராபாத் நிஜாமின் சர்வாதிகாரத்திலிருந்து மக்களை மீட்டெடுக்க ஆபரேசன் போலோவை தொடங்க அரசை

வலியுறுத்தியதன் அடிப்படையில் இந்தியாவின் ஒருபகுதியாக ஹைதராபாத் இணைக்கப்பட்டதை குறிப்பிட்டார்.

நாட்டின் சிறந்த பொறியாளர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளான வரும் 15ஆம் தேதி பொறியாளர் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவதை எடுத்துரைத்த பிரதமர் பொறியாளர்கள் எந்திரங்களை மட்டும் உருவாக்குவதில்லை, கனவுகளை நனவாக்கும் கர்மயோகிகள் என்றும் பாராட்டினார்.

விஸ்வகர்மா ஜெயந்தி வரும் 17ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளதை குறிப்பிட்ட பிரதமர் பாரம்பரிய கைவினை பொருட்கள், திறன்கள் மற்றும் அறிவியலை ஒருதலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதில் நாட்டின் விஸ்வகர்மாக்கள் பெரும் பங்காற்றுவதாக கூறினார்.

தச்சர்கள், பொற்கொல்லர்கள், குயவர்கள், சிற்பிகள் உள்ளிட்ட பாரம்பரிய தொழில் செய்பவர்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசு விஸ்வகர்மா திட்டத்தை தொடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகை காலங்களில் மக்கள் தூய்மை மற்றும் சுகாதாரத்தை பேண வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

************

**பிரதமர் - சீனா**

இந்தியா - சீனா இடையேயான உறவுகளை பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் முன்னெடுத்து செல்ல இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

டியான்ஜினில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள பிரதமர் அந்நாட்டு அதிபர் ஸி ஜின் பிங்கை இன்று சந்தித்து பேசியுள்ளார்.

இச்சந்திப்பு இந்தியா - சீனா மட்டுமன்றி ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பயனளிக்கும் என்று கூறிய பிரதமர் கைலாஷ் மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இருநாடுகளுக்கிடையேயான நேரடி விமான போக்குவரத்தும் மீண்டும் தொடங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது எல்லை மேலாண்மை தொடர்பாக இருநாட்டு சிறப்பு பிரதிநிதிகளுக்கிடையேயான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக ரஷ்யா, பெலாரஸ், உஸ்பெகிஸ்தான், ஈரான் உள்ளிட்ட ஷாங்காய் உறுப்பு நாட்டு தலைவர்களுடனும் பிரதமர் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

************

## GDP

நாட்டின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருச்சி சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனத்தின் மாவட்ட துணை தலைவர் திரு.ஆர்.சண்முகம் பேசுகையில்

**வாய்ஸ்**

************

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அயலக தமிழர்கள் சார்பில் ஜெர்மனியில் இன்று நடைபெறும் தமிழ்பண்பாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்.

டெசல்டோஃபில் நாளை நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்பதோடு முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறையினர்களுடன் கலந்துரையாடுகிறார்.

இந்த சந்திப்பின்போது முதலீடு அறிவிப்புகள் மற்றும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

************

**அன்பில் மகேஷ்**

திருச்சியில் இன்று நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி பணிநியமன ஆணைகளை இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஆட்சித்தலைவர் திரு.வி.சரவணன் திருச்சி பஞ்சப்பூர் பேருந்து நிலையத்தில் ஆட்டோ நிறுத்தும் இடம் குறித்த பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றார்.

இதுதொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் பேச்சுவார்த்தை நாளை நடைபெற உள்ளதாக கூறினார்.

************

**சுங்கச்சாவடி**

தமிழகத்தில் விக்கிரவாண்டி உளுந்தூர் பேட்டை, திருமாந்துறை, சமயபுரம், மணப்பாறை பொன்னம்பலபட்டி உள்ளிட்ட சுங்கச்சாவடிகளில் சுங்க கட்டண உயர்வு நாளைமுதல் நடைமுறைக்கு வருகிறது.

5 ரூபாய் முதல் 395 ரூபாய் வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

************

**இருவரி**

நடப்பு கல்வியாண்டிற்கான யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்ட மேற்படிப்புக்கு tnhealth.tn.gov.in என்ற இணையதளத்தில் மாணாக்கர் இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்.

இந்திய விமான படையில் அக்னிவீர் வாயு தேர்விற்கான ஆள்சேர்ப்பு முகாம் சென்னையில் ஆண்களுக்கு நாளை மறுநாளும்,

பெண்களுக்கு வரும் வெள்ளிக்கிழமையும் நடைபெற உள்ளது.

விருப்பமுடைய அரியலூர் மாவட்டத்தை சேர்ந்தோர் இதில் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் மானிய உதவிபெற விரும்பும்** விவசாயிகள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்கப்படும் என்றார்.

************

**நாகை**

நாகை மாவட்டம் கோடியக்கரை வன உயிரின சரணாலயப் பகுதிகளில் பிளாஸ்டிக் மற்றும் மக்கா குப்பைகள் அகற்றும் பணிகள் வனத்துறை சார்பில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**சந்திரகிரகணம்**

சந்திரகிரகணம் வரும் 7ஆம் தேதி நிகழ உள்ளதை ஒட்டி திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிவரை மட்டுமே திறக்கப்படும் என்று கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மறுநாள் அதிகாலை 5 மணிமுதல் பக்தர்கள் வழக்கம்போல் அனுமதிக்கப்படுவர்.

************

**சைக்கிள் பேரணி**

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி தூத்துக்குடியில் அஞ்சல் துறை சார்பில் ஃபிட் இண்டியா இயக்கம் குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

இதேபோல் தர்மபுரியில் நடைபெற்ற சைக்கிள் பேரணியை ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.

************

**மேட்டூர் - ஒகேனக்கல்**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 28 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 16 ஆயிரத்து 493 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 15 ஆயிரத்து 850 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

************

**வானிலை**

நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

************

**ஹாக்கி**

பீகார் ராஜ்கிரில் நடைபெறும் ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா தனது 2-வது போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜப்பானை எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**